# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office **பின்புறம்**),

**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

**ஆணை நாள் 14.05.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள் (1) SA 6084/விசாரணை/E/2024 (2) SA 6234/விசாரணை/E/2024 (3) SA 5969/விசாரணை/E/2024**

| | | |
|---|---|---|
| திரு எஸ்.ஆர்.ராஜ்குமார் | .. | மேல்முறையீட்டாளர் |
| | /எதிர்/ | |
| பொதுத் தகவல் அலுவலர்/<br>வட்ட துணை ஆய்வாளர்,<br>திருமங்கலம் வட்டம்,<br>மதுரை மாவட்டம் | .. | பொது அதிகார அமைப்பு |

******

**ஆணை**

1) இவ்வாணையத்தின் 10.02.2026 நாளிட்ட ஆணையை தொடர்ந்து திருமங்கலம் வட்ட துணை ஆய்வாளர் தனது 07.05.2026 நாளிட்ட அறிக்கையை இவ்வாணையத்திற்கு தபால் மூலம் அனுப்பி வைத்துள்ளார்.

2) அவ்வறிக்கையில், ஆணையத்தின் உத்தரவுபடி மனுதாரருக்கு களஆய்வு செய்ய அழைப்பாணை அனுப்பப்பட்டு, அவரும் 24.02.2026 அன்று தங்கள் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி ஆவணங்களை பார்வையிட்டார் என்றும், மனுதாரர் கோரிய ஆவணங்கள் அவருக்கு வழங்கப்பட்டது என்றும், ஆவணங்களை பெற்றுக் கொண்ட மனுதாரர், தான் கோரிய தகவல்கள் அனைத்தையும் முழு மனநிறைவுடன் பெற்றுக் கொண்டு, தனது மூன்று இரண்டாம் மேல்முறையீட்டு வழக்குகள் மீது மேல் நடவடிக்கை தேவையில்லை என்று எழுத்து மூலமாக ஏற்பளிப்பு அளித்துள்ளார் என்றும் பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்து, அவற்றின் நகல்களையும் இணைத்துள்ளார்.

3) இவ்வாணையத்தின் 10.02.2026 நாளிட்ட ஆணை நிறைவேற்றப்பட்டுள்ளதன் அடிப்படையிலும், மனுதாரர் தான் கோரிய தகவல்களை பெற்றுக் கொண்டு மனநிறைவு கடிதம் அளித்துள்ளதன் அடிப்படையிலும், இந்த மூன்று மேல்முறையீட்டு மனுக்களையும் முற்றாக்கம் செய்து ஆணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்கள் (1) SA 6084/விசாரணை/E/2024 (2) SA 6234/விசாரணை/E/2024 (3) SA 5969/விசாரணை/E/2024**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
வட்ட துணை ஆய்வாளர்,
திருமங்கலம் வட்டம்
மதுரை மாவட்டம்

திரு எஸ்.ஆர்.ராஜ்குமார்,
த/பெ ராமத்தேவர்,
எண்.2/152, பாண்டியன் நகர், சின்ன வடகரை,
திருமங்கலம் - 625 706
மதுரை மாவட்டம்

Copy to File
CR/PA